[பேரவைத் தலைவர்] [1975 அக்டோபர் 23

1967-ஆம் ஆண்டிலிருந்து 1971-ஆம் ஆண்டுவரை வேதாரண்யம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. பி. வெங்கடாசல தேவர் அவர்கள் 16—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1957-ஆம் ஆண்டிலிருந்து 1962-ஆம் ஆண்டுவரை வந்தவாசி பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எம். இராமச்சந்திர ரெட்டியார் அவர்கள் 18—10—1975-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) இரங்கல் தீர்மானம்

சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவராகவும் இருந்த திரு. ஆர். பி. இராமகிருஷ்ண ராஜு அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரை புத்தூர் மற்றும் திருத்தணி வட்டத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராகவும், 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டுவரை தமிழ் நாடு சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் இருந்த திரு. ஆர். பி. இராமகிருஷ்ண ராஜு அவர்கள் 17—5—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இந்தப் பேரவை தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்குத் தனது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது"*

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் ஒரு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிட நேரம் மவுனமாக நிற்க, இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(3) வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

சென்னையில் புறக்காவல் நிலையங்கள்

*1 வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் (Out Post) காவல் நிலையங்கள் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அவை எந்த எந்த இடங்களில் நிறுவப்பட இருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) சென்னை நகரில் கீழ்ப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள தலைமைச் செயலகப் பணியாளர் குடியிருப்பில் புறக்காவல் நிலையம் (அவுட்-போஸ்ட்) ஒன்றை ஏற்படுத்த காவல் துறைத் தலைமை அதிகாரி அனுப்பிய செயற்குறிப்பினை அரசு ஏற்று, அதற்கான ஒப்புதலை 9—5—1975-இல் வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்கள் துவக்கப்படுவதற்கு ஏதாவது விதிமுறை வகுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியானால், அவை என்ன என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: குற்றங்களினுடைய எண்ணிக்கைப் பெருக்கம், மக்கள் தொகை, அருகாமையில் உள்ள காவல் நிலையத்தின் தொலைவு இவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிதாக புறக்காவல் நிலையங்கள் திறக்கப்படுகின்றன.